தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3474/B/2019**

திரு. P. நடராஜன் — மேல்முறையீட்டாளர்

பொது தகவல் அலுவலர், எதிர்
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.P. நடராஜன் மற்றும் பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 25.1.2019 தேதியிட்ட மனுவில், சாமிநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்.48/3B மற்றும் 48/3C, 3D க்கு இடையே உள்ள நிலம் தொடர்பாக சில விவரங்கள் வேண்டி, பொது தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஓமலூர் வட்டம், சேலம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில், மனுதாரர், 8.3.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு

அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 09.04.2019 தேதியிட்டு, இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை இரண்டு நாட்களுக்குள் அனுப்பி வைத்து அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

5. **பொது தகவல் அலுவலர், 12.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். எனவே, மனுதாரருக்கு தகவல் முழுமையாக அளிக்கப்பட்டதாக இவ்வாணையம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதை ஆணையம் ஏற்று, இவ்வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 3474/B/2019**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.

திரு. ப. நடராஜன், M.Sc., B.Ed.,
த/பெ பச்சமுத்து,
1/9, சாமிநாயக்கன்பட்டி,
லிங்கபைரவி கோவில் அருகில்,
வழி அரசு பொறியியற் கல்லூரி,
சேலம் 636 011.
அலைபேசி - 94422 45751.

Copy to: File
SSPA-16.11.2020